24.09.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கூடுதல் மகசூல் பெற சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கலாம்: வேளாண் துறை

கூடுகல் மகசூல் பெற விவசாயிகள் பிரகமரின் விவசாய பாசன மேம்பாட்டுக் கிட்டக்கின் கீம் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கலாம் என்று வேளாண்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறிக்கு, மாவட்ட வேளாண் இணை இயக்குநர் பெ.ஹரிதாஸ் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடலூர் மாவட்டத்தில் 47,000 ஆழ்குழாய்க் கிணறுகள் உள்ளன. நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து வரும் நிலையில் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்ய, நீரை சிக்கனமாகப் பயன்படுத்த சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசன முறைகளை கையாள வேண்டும்.

நெற்பயிரைப் பொறுத்தவரை சராசரி 110 நாள் சாகுபடி காலத்திற்கு 1250 மி.லி. நீர் தேவை. கரும்பு பயிருக்கு 360 நாள்களுக்கு 2200 மி.லி, தென்னைக்கு நாள்தோறும் 200 லிட்டர் நீர் தேவை. சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதன் மூலம் கரும்புக்கு 1000 மி.லி, தென்னைக்கு நாள்தோறும் 75 முதல் 100 லிட்டர் மட்டுமே தேவைப்படும். சொட்டுநீர்ப் பாசனம் செய்வதால் பெருமளவு நீர் மிச்சமாவதுடன், களைகளின் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டு 33 சதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கிறது. சொட்டு நீர்ப்பாசனத்தை பொறுத்த வரை கரும்பு, தென்னை, எண்ணெய் பனை ஆகிய பயிர்களுக்கு சிறு குறு விவசாயிகளுக்கு 100 சத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சத மானியத்திலும் அமைத்துத் தரப்படுகிறது.

இதற்காக விவசாயிகள் அருகிலுள்ள வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### நிலக்கடலை பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு : விவசாயிகள், விஞ்ஞானிகள் கலந்துரையாடல்

திருச்சி: மணப்பாறை வட்டாரம் செவலூர் மற்றும் செட்டியபட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்த விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் மணப்பாறையில் 5 நாள் நடந்தது. வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சேட்முகமது தலைமை வகித்தார். 25 விவசாயிகள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். மணப்பாற வட்டார அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சந்தனமேரி வரவேற்றார். சிறுகமணி வேளாண்மை அறிவியல் மைய பூச்சியியல் பேராசிரியர் பாஸ்கரன், நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகம் கடை பிடித்தல் குறித்து விவசாயி களுடன் தொழில்நுட்ப கலந்துரையாடினார். வேளாண்மை அலுவலர் ஆனந்த செல்வி; மானாவாரி நிலக்கடலை சாகுபடியில் விதைக்கும் கருவி கொண்டு விதைப்பு செய்தல் , உயிர் உரங்களின் முக்கியத்துவம், நிலக்கடலை ரிச் முக்கியத்துவங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்.

துணை வேளாண்மை அலுவலர் மணிமாறன் நிலக்கடலையில் விதைநேர்த்தி செய்தல், களைக்கொல்லி தெளித்தல், ஜிப்சம் இடுதல், நுண்ணூட்டக்கலவை தெளிப்பு குறித்து விவசாயிகளின் சந்தேககங்களுக்கு தொழில்நுட்ப விளக்கமளித்தார். உதவி வேளாண்மை அலுவலர் இராமசுந்தரம் வேளாண்மைத்துறையில் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப விளக்கங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார். பயிற்சி ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலவலர் சிவக்குமார், சரவணன், பொம்மையாசாமி, விஜயரத்தினம், கோகிலா, ஆகியோர் செய்திருந்தனர்.

## முதல் கட்டமாக 200 விவசாயிகளுக்கு ரூ.82.62 லட்சம் கடன் தள்ளுபடி சான்று

திருவாரூர் : திருவாரூர் மாவட்ட விவசாயிகள் 200 பேருக்கு முதல் கட்டமாக ரூ.82.62 லட்சம் கடன் தள்ளுபடி சான்றுகளை அமைச்சர் காமராஜ் வழங்கினார். திருவாரூர் மாவட்டத்தில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கடந்த மார்ச் மாதம் 31 ம் தேதி வரை நிலுவையில் இருந்த பயிர்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு அதற்கான சான்றிதழ்கள் வழங்கும் விழா நேற்று கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் நிர்மல்ராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் 200 விவசாயிகளுக்கு ரூ.82 லட்சத்து 62 ஆயிரத்து 638 தள்ளுபடி செய்யப்பட்டதற்கான சான்றுகளை விவசாயிகளிடம் வழங்கி அமைச்சர் காமராஜ் பேசியது:

கடந்த தேர்தல் அறிக்கையில் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தவாறு சிறு, குறு விவசாயிகள் பெற்ற கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன்படி திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 140 கூட்டுறவு சங்கங்களில் கடன்பெற்ற 76 ஆயிரத்து 967 விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.222 கோடியே 59 லட்சம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது முதல் கட்டமாக 200 விவசாயிகளுக்கு அதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

காவிரி நீர் பிரச்சனையில் மாநில முதல்வர்கள் ஒன்றுகூடி பேச வேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சியினர் கருத்து தெரிவித்துள்ளனர். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை கூட மதிக்காமல் கர்நாடகத்தில் வன்முறை நடைபெற்று வரும் நிலையில் முதல்வர்கள் ஒன்றுகூடி பேசி தீர்ப்பது என்பது எந்த வகையில் சாத்தியமாகும். கர்நாடக முதல்வராகவும், இந்திய நாட்டின் பிரதமராகவும் பதவி வகித்த ஒருவர் கூட உச்சநீதிமன்றம் வரம்புமீறி செயல்படுவதாக கூறிவருகிறார்.

எனவே தான் முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்து சட்டபோராட்டத்தை நடத்தி வருகிறார். காவிரி மேலாண் வாரியம் அமைக்க உத்தரவிட்ட தீர்ப்பானது தமிழகத்திற்கு கிடைத்துள்ள வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பாகும். இவ்வாறு அமைச்சர் காமராஜ் பேசினார். விழாவில் எம்.பி கோபால், டி.ஆர்.ஒ மோகன்ராஜ், கூட்டுறவு இணை பதிவாளர் காந்திநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருக்குறுங்குடியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

நெல்லை: தமிழக அரசின் கால்நடைத்துறை, வனத்துறை சார்பில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் திருக்குறுங்குடியில் நடந்தது.

திருக்குறுங்குடி அருகேயுள்ள திருத்துப்பனை, கட்டளை, புதுத்தெரு ஆகிய கிராமங்களில் நடந்த இம்முகாமில் 100 பசுக்கள் மற்றும் கன்றுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. இம்முகாம் பணியினை நெல்லை மாவட்ட வனக்கால்நடை மருத்துவப்பிரிவு உதவி மருத்துவர் பரமசிவம், கால்நடை ஆய்வாளர் அர்னால்டு வினோத், ஏர்வாடி கால்நடை உதவி மருத்துவர் சுகுமார், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் கிருஷ்ணன், அன்புக்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

## மேலக்கலங்கலில் நுண்ணீர் பாசன பயிற்சி முகாம்

சுரண்டை: சுரண்டை அடுத்த மேலக்கலங்கலில் நுண்ணீர் பாசனம் மற்றும் பராமரிப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது. பிரதம மந்திரியின் விவசாய நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் நீர் அறுவடை மற்றும் நீர் மேலாண்மை தொடர்பாக விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் மேலக்கலங்கலில் நடந்தது. ஊராட்சி தலைவர் சரவணவேல் முருகையா தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் கனகராஜ் முன்னிலை வகித்தார். இதில் திரளாகப் பங்கேற்ற மேலக் கலங்கல் மற்றும் சுற்று வட்டார விவசாயிகளுக்கு வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை அலுவலர்களும், வேளாண் தொழில்நுட்ப வல்லுநர்களும் நுண்ணீர் பாசனம் குறித்து செயல்விளக்கம் அளித்தனர்.

வேளாண் துறை துணை இயக்குநர்கள் சங்கர், செல்வராஜ், பெருமாள் உள்ளிட்டோர் முகாமின் நோக்கத்தை விளக்கிக் கூறினர். இதே போல், கிள்ளிகுளம் வேளாண் கல்லூரி மாணவிகள் ஷீலாப்ரியா, சவுமியா, சுகன்யா, சுருதிமணி, சுருதி செல்வராஜ், சுஸ்மிதா ராஜ், ரசிகப்பிரியா உள்ளிட்டோரும் நுண்ணீர் பாசனத்தை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள், நுண்ணீர் பாசன திட்ட செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு குறித்து காணொலி காட்சி மூலம் விளக்கினர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**மற்ற மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படும் புண்ணாக்கு, மக்காச்சோளத்தை பரிசோதனை செய்த பிறகே பயன்படுத்த வேண்டும் ஆராய்ச்சி நிலையம் தகவல்**



நாமக்கல்,

மற்ற மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படும் தீவன மூலப்பொருட்களில் குறிப்பாக புண்ணாக்கு மற்றும் மக்காச்சோளம் போன்றவற்றை பரிசோதனை செய்த பின்னரே பயன்படுத்த வேண்டும் என வானிலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

<u>வானிலை ஆராய்ச்சி நிலையம்</u>

நாமக்கல் மாவட்டத்தில் இன்று (சனிக்கிழமை) முதல் 27–ந் தேதி வரை நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

இன்று முதல் 27–ந் தேதி வரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இன்று முதல் அடுத்த 3 நாட்கள் மழை பெய்ய வாய்ப்பு இல்லை. வருகிற 27–ந் தேதி 2 மி.மீட்டர் வீதம் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. காற்று மணிக்கு 9 கி.மீ. வேகத்தில் மேற்கு திசையில் இருந்து வீசும். வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 96.8 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 77 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக 74 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக 46 சதவீதமாகவும் இருக்கும்.

## பரிசோதனை செய்ய வேண்டும்

தென்மேற்கு பருவ மழைக்காலம் அதன் இறுதி கட்டத்தில் இருந்தாலும், அதன் தாக்கம் மிதமான அளவில் நீடிக்கிறது. இதனால் பகல் வெப்பம் சற்றே அதிகமாக காணப்பட்டாலும், காற்றின் வேகத்தால் உயர்ந்த வெப்பம் அதிக நேரம் நீடிக்காமல், கோழிகளுக்கு சாதகமாகவே தொடர்ந்து காணப்படுகிறது. இதனால், தீவன எடுப்பு இயல்பை ஒட்டி காணப்படும். முட்டை உற்பத்தியும், முட்டை எடையும் இயல்பான அளவுகளிலேயே நீடிக்கும். மற்ற மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படும் தீவன மூலப்பொருட்களில் குறிப்பாக புண்ணாக்கு மற்றும் மக்காசோளம் போன்றவற்றை பரிசோதனை செய்த பின்னரே பயன்படுத்த வேண்டும்.

கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் கடந்த வாரம் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும் ஈரல் அயற்சியால் பாதிக்கப்பட்டு உள்ளது தெரியவந்துள்ளது. ஆகவே, பண்ணையாளர்கள் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனத்தில் பூஞ்சை நச்சு உள்ளதா என பரிசோதனை செய்து அதற்கு தகுந்தாற்போல் தீவன மேலாண்மை முறைகளை கையாளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**பரமத்தி வேலூரில் தேங்காய் பருப்பு விலை உயர்வு**



பரமத்தி வேலூர்,

பரமத்தி வேலூரில் தேங்காய் பருப்பு விலை உயர்ந்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

<u>தேங்காய் பருப்பு</u>

பரமத்தி வேலூர் தாலுகாவில் கபிலர்மலை, பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், பாலப்பட்டி, மோகனூர், சோழசிராமணி, ஜேடர்பாளையம், அய்யம்பாளையம், பிலிக்கல்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை பயிர் செய்யப்பட்டு உள்ளது.

இங்கு விளையும் தேங்காய்களை உடைத்து அதன் பருப்புகளை சிறு வியாபாரிகள் வியாழக்கிழமை தோறும் பரமத்தி வேலூர் வெங்கமேட்டில் உள்ள சேலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு கொண்டு வரப்பட்டு தரத்திற்கு தகுந்தார்போல் மறைமுக ஏலம் விடப்படுகிறது.

<u>விலை உயர்வு</u>

கடந்த வாரம் நடைபெற்ற தேங்காய் பருப்பு ஏலத்தில் 2,761 கிலோ தேங்காய் பருப்பு ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் அதிகபட்சமாக கிலோ ஒன்று 59 ரூபாய் 59 பைசாவிற்கும், குறைந்தபட்சமாக 56 ரூபாய் 79 பைசாவிற்கும், சராசரியாக 59 ரூபாய் 19 பைசாவிற்கும் ஏலம் போனது.

இந்த நிலையில் நேற்று நடைபெற்ற தேங்காய் பருப்பு ஏலத்தில் 2,326 கிலோ தேங்காய் பருப்புகள் ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் அதிகபட்சமாக கிலோ ஒன்று 62 ரூபாய் 76 பைசாவிற்கும், குறைந்தபட்சமாக 58 ரூபாய் 89 பைசாவுக்கும், சராசரியாக 61 ரூபாய் 29 பைசாவிற்கும் ஏலம் போனது. இந்த வாரம் மொத்தம் ரூ.1 லட்சத்து 40 ஆயிரத்து 312–க்கு தேங்காய் பருப்பு விலை போனது. இந்த வாரம் தேங்காய் பருப்பின் வரத்து சற்று குறைந்து இருந்தாலும், அதன் விலை உயர்வு அடைந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**பயிர் காப்பீடு திட்டத்தில் புதிய நடைமுறை செயல்படுத்தப்படும் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தகவல்**



சிவகங்கை,

பயிர் காப்பீடு திட்டத்தில் 4 வகையான இழப்பீடு வழங்கும் புதிய நடைமுறை செயல்படுத்தப்பட உள்ளதாக சிவகங்கையில் நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

<u>குறைதீர் கூட்டம்</u>

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட கலெக்டர் மலர்விழி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட வருவாய் அதிகாரி இளங்கோ, கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) சுதர்சன், கூட்டுறவுத்துறை இணை பதிவாளர் செல்வகுமரன் மற்றும் அனைத்துத்துறை அதிகாரிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

கூட்டம் தொடங்கியதும் மாவட்ட கலெக்டர் மலர்விழி கூறும்போது, தற்போது விவசாயிகளின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது என்றும், திட்டத்தை செயல்படுத்த உள்ள நிறுவனத்தின் அதிகாரி விளக்கம் அளிப்பார் என்றும் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து சிவகங்கை மாவட்டத்தில்

விவசாயிகளின் பயிர்காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்தும் தனியார் நிறுவனத்தின் அதிகாரி செந்தில்குமார் கூறியதாவது:–

4 வகை இழப்பீடு

தற்போது பயிர் காப்பீட்டு திட்டத்தில் புதிய நடைமுறை அமல்படுத்தப்பட உள்ளது. இந்த முறையில் 4 வகையில் இழப்பீடு வழங்கப்பட உள்ளது.

முதல் முறையில் பயிரிட்டு விளையும் நிலைக்கு முன்பே ஏற்படும் இழப்பிற்கு காப்பீடு வழங்கப்படும். 2–வதாக தற்போது நடைமுறையில் உள்ள பழைய திட்டம். இந்த திட்டத்தில் இதற்கு முன்பு பயிர்க்கணக்கீடு செய்யும் முறை பிர்க்கா அளவில் இருந்தது. தற்போது இதில் மாற்றம் செய்யப்பட்டு வருவாய் கிராம அளவில் கணக்கீடு செய்யும் முறை செயல்படுத்தப்பட உள்ளது.

3–வதாக, அறுவடை சமயத்தில் இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பாதிப்பிற்கு தனிநபர் இழப்பீடு வழங்கும் முறை. இதில் பாதிப்பு ஏற்பட்ட 48 மணி நேரத்தில் விவசாயிகள் தங்கள் காப்பீடு தொகை செலுத்திய வங்கி அல்லது வேளாண்மை அலுவலகம் அல்லது எங்களுக்கு தெரிவிக்க வேண்டும். நாங்கள் உடனடியாக அங்கு சர்வே செய்து உரிய நடவடிக்கை எடுப்போம்.

4–வதாக, குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் நிலச்சரிவு, மண்சரிவு போன்ற பாதிப்புகளால் ஏற்படும் பாதிப்பிற்கு இழப்பீடு வழங்கும் முறை. இந்த முறைக்கும் 48 மணி நேரத்தில் தகவல் அளிக்கப்பட வேண்டும்.

மேலும் தற்போது வருவாய் கிராம அளவில் பயிர் கணக்கிடும் முறையிலும் முன்பு போல் இல்லாமல், 4 இடங்களில் கணக்கிடப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

விதை நெல்

பின்னர் விவசாயிகள் தரப்பில் பேசும்போது கூறியதாவது:–

பயிர் காப்பீட்டிற்கு கணக்கெடுக்கும் போது அதிகாரிகள் விவசாயிகளையும் வைத்து கணக்கிட வேண்டும். திருப்புவனம், மானாமதுரை உள்பட மாவட்டம்

முழுவதும் புதிய பயிர் காப்பீடு குறித்த விழிப்புணர்வு கூட்டங்களை நடத்த வேண்டும். பயிர்காப்பீடு திட்டத்தில் சான்று வழங்க கிராம நிர்வாக அதிகாரிகள் ஊரில் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு தேவையான விதை நெல் சரிவர கிடைப்பதில்லை. தேசியமயமாக்கபட்ட வங்கிகளில் விவசாயிகளுக்கு இதுவரை நேரடி பயிர்க்கடன் வழங்கப்படாமல் உள்ளது.

இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

இவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக கலெக்டர் தெரிவித்தார்.

இதேபோல் காப்பீடு திட்டத்தை பொதுத்துறை நிறுவனங்கள் மூலம் செயல்படுத்த வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கைக்கு இது குறித்து அரசுக்கு தகவல் தெரிவிப்பதாக கலெக்டர் கூறினார்.

<u>இழப்பீட்டுத் தொகை விவரம்</u>

தொடர்ந்து பயிர்காப்பீட்டு நிறுவன அதிகாரி செந்தில்குமார் மீண்டும் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

தற்போது பயிர்காப்பீடு தொகையாக ஒரு ஏக்கருக்கு நெல் இழப்பீடாக ரூ.22 ஆயிரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிரிமியமாக ரூ.330 செலுத்த வேண்டும். பிரிமியம் செலுத்த வருகிற நவம்பர் மாதம் 30–ந்தேதி கடைசிநாள். இதுகுறித்த அறிவிப்பு வருகிற 26–ந்தேதி வெளியாகும். அதன்பின்னர் தாங்கள் கணக்கு வைத்துள்ள வங்கியில் பிரிமிய தொகையை செலுத்தலாம்.

இதேபோல் கரும்புக்கு இழப்பீடாக ரூ.46 ஆயிரம் வழங்கப்படும். இதற்கு பிரிமியமாக ரூ.1,380 செலுத்த வேண்டும். உளுந்துக்கு இழப்பீடாக ரூ.12 ஆயிரம் தரப்படும். பிரிமியமாக ரூ.180 செலுத்த வேண்டும். நிலக்கடலைக்கு இழப்பீடு ரூ.17 ஆயிரம், பிரிமியம் ரூ.255. பருத்திக்கு இழப்பீடு ரூ.17 ஆயிரம், பிரிமியம் ரூ.850. வாழைக்கு இழப்பீடு ரூ.35 ஆயிரம், பிரிமியம் ரூ.1,750. மிளகாய்க்கு இழப்பீடு ரூ.18 ஆயிரம், பிரிமியம் ரூ.900. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**மேட்டூர் அணையில் இருந்து சம்பா சாகுபடிக்காக திறக்கப்பட்ட காவிரி நீர் திருச்சி வந்தடைந்தது கல்லணையில் இருந்து பாசனத்துக்கு இன்று தண்ணீர் திறப்பு**



திருச்சி,

சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட காவிரி நீர் திருச்சி வந்தடைந்தது.

<u>கல்லணையில் இருந்து பாசனத்துக்கு இன்று தண்ணீர் திறந்து விடப்படுகிறது. காவிரி நீர்</u>

காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்காக ஆண்டுதோறும் ஜூன் மாதம் 12–ந்தேதி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம். ஆனால் கர்நாடக மாநில அணைகளில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படாததால், இந்த ஆண்டு ஜூன் 12–ந்தேதி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படவில்லை. காவிரி நடுவர்மன்ற இறுதி தீர்ப்பின்படி, தமிழகத்திற்கு உரிய தண்ணீரை திறந்து விட கர்நாடகத்துக்கு உத்தரவிடவேண்டும் என கோரி தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கில் சுப்ரீம் கோர்ட்டு பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் கர்நாடக மாநில அரசு காவிரியில் தண்ணீரை திறந்து விட்டது.

## <u>மேட்டூர் அணை திறப்பு</u>

இதனைத்தொடர்ந்து மேட்டூர் அணையின் நீர்மட்டம் 80 அடியை தாண்டியது. டெல்டா பாசன விவசாயிகள் சம்பா சாகுபடியை தொடங்குவதற்கு வசதியாக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கையை ஏற்று செப்டம்பர் 20–ந்தேதி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.

இதையடுத்து கடந்த 20–ந்தேதி அமைச்சர்கள் முன்னிலையில் மேட்டூர் அணையில் இருந்து சம்பா சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது.

## <u>முக்கொம்பில் சிறப்பு பூஜை</u>

மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் நேற்று முன்தினம் அதிகாலை கரூர் மாவட்டம் மாயனூர் கதவணையை வந்தடைந்தது. நேற்று அதிகாலை 4 மணிக்கு திருச்சி மாவட்ட எல்லையான பெட்டவாத்தலை பகுதிக்கு வந்தடைந்தது. பின்னர் பெருகமணி, திருப்பராய்த்துறை, எலமனூர் பகுதிகளை கடந்து முக்கொம்பு மேலணைக்கு நேற்று காலை 8 மணியளவில் வந்து சேர்ந்தது. முக்கொம்பு மேலணைக்கு தண்ணீர் வந்ததை தொடர்ந்து, மேலணையில் உள்ள மதகிற்கு பொதுப்பணித்துறை அதிகாரிகள் சிறப்பு பூஜைகள் நடத்தினார்கள். காலையில் வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடியாக வந்த தண்ணீர், பின்னர் படிப்படியாக அதிகரித்து நண்பகல் நேரத்தில் வினாடிக்கு 8 ஆயிரத்து 500 கன அடியாக உயர்ந்தது.

தண்ணீர் வந்ததை தொடர்ந்து மேலணையில் உள்ள மதகுகளின் பொத்தானை அழுத்தி பொதுப்பணித்துறை ஆற்றுப்பாதுகாப்பு கோட்ட செயற்பொறியாளர் கலைச்செல்வன், உதவி செயற்பொறியாளர் இளங்கோவன், வெங்கடேசன் ஆகியோர் தண்ணீரை திறந்து விட்டனர். மேலணையில் தண்ணீர் திறக்கப்பட்டதால் மதகின் வழியாக தண்ணீர் சீறிப்பாய்ந்து காவிரி ஆற்றில் வெளியேறியதை தொடர்ந்து பொதுப்பணித்துறை அதிகாரிகள், விவசாயிகள் மலர்கள் மற்றும் நவதானியங்களை தூவி வரவேற்றனர். முக்கொம்பு மேலணையில் இருந்து வினாடிக்கு 11 ஆயிரத்து 285 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

போலீஸ் பாதுகாப்பு

முக்கொம்பு சுற்றுலா மையத்தில் தண்ணீர் அதிகமாக வருவதால் சுற்றுலா பயணிகள் ஆர்வத்தில் குளிக்க ஆசைப்பட்டு காவிரி ஆற்றில் இறங்குவதை தடுப்பதற்காக அந்த பகுதியில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். காவிரி ஆற்றில் தண்ணீர் செல்வதை ஏராளமான சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் ஆர்வமுடன் பார்த்து ரசித்தனர்.

ஸ்ரீரங்கம் வந்தடைந்தது

கம்பரசம்பேட்டை தடுப்பணையை கடந்த காவிரி தண்ணீர் நேற்று மாலை திருச்சி ஸ்ரீரங்கம் அம்மா மண்டபத்திற்கு வந்தது. அம்மா மண்டபம் படித்துறையில் பெருக்கெடுத்து ஓடிய காவிரி நீரை விவசாயிகள் மற்றும் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியுடன் பார்த்தனர். சிலர் தண்ணீரில் இறங்கி ஆனந்த குளியல் போட்டனர். திருச்சி காவிரி பாலத்தை கடந்த தண்ணீர் கல்லணை நோக்கி சீறிப்பாய்ந்து சென்றது.

காவிரி நீர் இன்று(சனிக்கிழமை) காலை கல்லணை சென்றடைகிறது. இன்று பகல் 10.45 மணிக்கு கல்லணையில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்படுகிறது.